# இந்திய உயர் ஸ்தானிகராலயம்

# கொழும்பு

************

## <u>ஊடக அறிக்கை</u>

**“பெருநோய் காலத்தில் பொலிஸ் பணி” குறித்த e-ITEC இணைய செயலமர்வு; ஆளுமைவிருத்தியில் இந்திய - இலங்கை ஒத்துழைப்பினை மேம்படுத்துதல்**

இந்திய வெளிவிவகார அமைச்சினால் ITEC இல் பங்குகொள்ளும் நாடுகளுக்காக நடத்தப்பட்ட இணைய கருத்தரங்குகளின் தொடர்ச்சியாக 2020 ஆகஸ்ட் 10 மற்றும் 11 ஆகிய திகதிகளில் பெருநோய் காலப்பகுதியில் பொலிஸ் பணி தொடர்பான இணைய செயலமர்வு ஒன்று புதுடில்லியில் உள்ள கொள்கை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திணைக்களத்தினால் நடத்தப்பட்டிருந்தது. இந்த இணைய கருத்தரங்கில் 25 நாடுகளைச் சேர்ந்த 97 பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர். அம்பாறை பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு.வி.ஜி.டி.அஜசா கருணாரத்னே, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ எல்.யு.என்.பிரியந்த லியனகே மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் கே.டி.நிமிலா டி சில்வா ஆகியோர் உள்ளடங்கிய 10 பொலிஸ் அதிகாரிகள் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி இந்த இணைய கருத்தரங்கில் கலந்துகொண்டிருந்தனர்.

இந்திய உள்துறை இணை அமைச்சர் கௌரவ ஸ்ரீ ஜி கிசான் ரெட்டி இந்த இரு நாள் இணைய செயலமர்வினை ஆரம்பித்து வைத்தார். மனிதத்துவ பொலிஸ் பணி, பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பொலிஸ் பணி, பொதுசன தொடர்பு, சிக்கலான நேரங்களில் பொலிஸ் பணி, வினைத்திறன் மிக்க பொலிஸ் பணிக்கு புலனாய்வினை பயன்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஓய்வுபெற்ற சிரேஷ்ட இந்திய பொலிஸ் சேவை உத்தியோகத்தர்கள் பல்வேறு தலைப்புக்களில் தமது கருத்துக்களை இங்கு முன்வைத்திருந்தனர்.

சுகாதாரம், நல்லாட்சி மற்றும் பொலிஸ் பணி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் முன்னெடுக்கப்படும் e-ITEC அமர்வுகளில்

இலங்கை உத்தியோகத்தர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றியமையை முன்னிட்டு இந்திய உயர் ஸ்தானிகராலயம் பாராட்டுக்களை தெரிவித்துள்ளது. அண்மையில் இலங்கை இராணுவ படை பிரதானி மேஜர் ஜெனரல் எஸ்.ஜே.எஸ்.குணவர்த்தன அவர்கள் முசூரியில் உள்ள நல்லாட்சிக்கான தேசிய நிலையத்தினால் 2020 ஜூன் 18-19 ஆகிய திகதிகளில் முன்னெடுக்கப்பட்ட "கொவிட்-19: பெருநோய் காலத்தில் நல்லாட்சிக்கான செய்முறைகள்" என்ற தலைப்பிலான செயலமர்வில் கலந்துகொண்டு பெருநோயினை கட்டுப்படுத்துவதில் இலங்கையின் அனுபவங்கள் மற்றும் சிறந்த செயற்பாடுகள் தொடர்பில் தனது கருத்துக்களை பகிர்ந்துகொண்டிருந்தார்.

*****

கொழும்பு
சகவருடம் 1942 சிராவண 21
12 ஆகஸ்ட் 2020